**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR QUARRYING PROPOSAL OVER AN EXTENT OF 3.25.5 Ha - M/s.G.PANDURANGAN ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F.NO. 84/1(P), 85(P), 86/1, 86/2, 87/1, 87/2, 88, 109/2, 109/3A, 109/3B, 110/1B, 110/2B(P) & 110/2C(P) OF SENGUNDRAPURAM VILLAGE, VIRUDHUNAGAR TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 08.04.2025, 11.00 A.M AT M/S.SRI RENUGADEVI THIRUMANA MANDAPAM, DOOR NO.1/161, MANGAMMAL SALAI, SENGUNDRAPURAM PANCHAYAT, VIRUDHUNAGAR TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | M.Sivakumar | : | Revenue Divisional Officer<br>Sattur,<br>Virudhunagar District. |
| 2 | Er. J. Hamoneth Joesun | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 3 | Er. K. Keerthy | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| | As per Attendance Register | : | Public, Project proponent 128 Nos<br>(List enclosed) |

The public hearing was held on 08.04.2025 at 11.00AM at M/s.Sri Renugadevi Thirumana Mandapam, Door No.1/161, Mangammal Salai, Sengundrapuram Panchayat, Virudhunagar Taluk, Virudhunagar District under EIA Notifications, 2006 for the Quarry proposal over an extent of 3.25.5 ha - M/.G.Pandurangan Rough Stone And Gravel Quarry, S.F.No. 84/1(P), 85(P), 86/1, 86/2, 87/1, 87/2, 88, 109/2, 109/3a, 109/3b, 110/1b, 110/2b(P) & 110/2c(P) of Sengundrapuram Village, Virudhunagar Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sattur, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinathanthi"

and "The Times of India" on 26.02.2025. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written statements would also be received.

Further he stated that the views, suggestions and queries of the public will be recorded through video graphy and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. Subsequently, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/.G.Pandurangan Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

Further, the public has furnished their views with respect to the project as follows –

1. **<u>Mr. Muthukumar, Sengunrapuram</u>**

He stated that there is currently no disturbance caused by Mr. Pandurangan's quarry operations to the people of Sengunrapuram. He added that gravel is available at a cheaper price due to the quarry, and Mr. Pandurangan is also contributing welfare activities for the panchayat and the public.

2. **<u>Mr. Munichamy, Vadamalai Kurichi</u>**

He said that the quarry causes no harm to his village. It provides easy access to stone, gravel, and sand for construction. Instead of buying materials from far away, it's easier to procure locally. Hence, he fully supports the quarry project.

3. **<u>Mr. Narayanan, Nattarmangalam</u>**

He mentioned that the quarry operates beyond 300 meters from his place, and hence there's no impact. It helps them obtain construction materials at affordable rates.

4. **Mrs. Chinnapandiyammal, Narayanapuram**

She stated that Mr. Pandurangan assured that water from the quarry would be taken by the villagers. Initially, they came to object, but accepted his request based on his assurance. However, she emphasized they cannot accept any disturbance if it arises later.

5. **Mr. Thangaraj, Sengunrapuram**

He stated that he had no objections to the quarry project.

6. **Mr. Balamurugan, Sengunrapuram**

He praised Mr. Pandurangan for his contributions and services to the local people. He said there were no objections to the quarry being established.

7. **Mr. Parthasarathi, Meesalur**

He mentioned that due to the operation of this quarry, gravel and M-sand needed for construction will be available at cheaper rates. Since sand from farther places is expensive, the local quarry is beneficial and should definitely be allowed.

8. **Mr. Rathinavel, Kumaravelpuram**

He said he was able to get all the materials needed for house construction due to the quarry. He saw no disturbance or objection to it.

9. **Mr. Mahendran, Moolipatti**

He noted that stones for construction will be available at lower cost due to the proposed quarry. Mr. Pandurangan also provided sheds for the village hospital. Hence, the quarry benefits all surrounding villages, and he expressed his support.

10. **Mr. Pounraj, Sengunrapuram**

He stated there were no objections to the quarry, and it could also generate employment opportunities.

11. **Mrs. Jayarani, Meesalur**

She said Mr. Pandurangan promptly supplies construction materials when requested, and that the quarry's presence is beneficial and appreciated.

12. **Mr. Kalidas, Sengunrapuram**

He mentioned that there were no objections to the quarry. Mr. Pandurangan helps the community in many ways, and there is no harm caused by the quarry.

13. **Mr. Pandian, Narayanapuram**

He said that no problems arises due to the operation of the quarry.

14. **Mrs. Jothilakshmi, Narayanapuram**

She stated that the quarry has not caused any issues. Mr. Pandurangan has provided many benefits to the local people, and hence, she had no objections.

15. **Mr. Adhavan, Pavalai**

He insisted that the quarry should strictly follow government regulations. He noted that the project provides employment for local villagers and therefore had no objection, provided all rules are followed.

16. **Mrs. Rangammal, Narayanapuram**

She stated that she had no objection to the quarry.

17. **Mrs. Sundarammal, Narayanapuram**

She said the quarry does not cause any harm and praised the good work being done.

18. **Mrs. Selvi, Sengunrapuram**

She said there were no problems due to the quarry and that it was helpful for construction-related activities.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written of petitions.

| | | |
|---|---|---|
| Total number of written petitions received | - | 04 |
| In Favour of the proposed quarry | - | 03 |
| Against the proposed quarry | - | 01 |

With this, the meeting came to the end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

Revenue Divisional Officer
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 11– pages, 128 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், செங்குன்றாபுரம் கிராமம், புல எண்கள். 84/1(P), 85(P), 86/1, 86/2, 87/1, 87/2, 88, 109/2, 109/3A, 109/3B, 110/1B, 110/2B(P) &; 110/2C(P)-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.G.பாண்டுரங்கன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 08.04.2025 முற்பகல் 11.00 மணியளவில் தி/ள்.ஸ்ரீ ரேணுகாதேவி திருமண மண்டபம், கதவு எண்.1/161, மங்கம்மாள் சாலை, செங்குன்றாபுரம் பஞ்சாயத்து, விருதுநகர் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.மு.சிவக்குமார், | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி. ஜே.ஹேமந்த் ஜோசன் | : | மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 3 | பொறி.க. கீர்த்தி | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| | வருகை பதிவேட்டின் படி | : | பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 128 நபர்கள்<br>(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

விருதுநகர் வட்டம், செங்குன்றாபுரம் கிராமம், புல எண்.84/1(P), 85(P), 86/1, 86/2, 87/1, 87/2, 88, 109/2, 109/3A, 109/3B, 110/1B, 110/2B(P) & 110/2C(P)ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.G.பாண்டுரங்கன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் தி/ள்.ஸ்ரீ ரேணுகாதேவி திருமண மண்டபம், கதவு எண்.1/161, மங்கம்மாள் சாலை, செங்குன்றாபுரம் பஞ்சாயத்து, விருதுநகர் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 08.04.2025 முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்டசுற்றுச்சூழல்

பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர், ஏனைய அரசு அதிகாரிகள்,பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி டைம்ஸ் ஆப் இந்தியா" நாளிதழ்களில் 26.02.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்புகூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன் பின் தி/ள்.G.பாண்டுரங்கன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான

சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. <u>**திரு. முத்துக்குமார், செங்குன்றாபுரம்.**</u>

திரு.முத்துக்குமார் அவர்கள், தற்போது பாண்டுரங்கன் அவர்களின் கல்குவாரி செயல்பட இருப்பதால் செங்குன்றாபுரம் மக்களுக்கு எந்தவொரு இடையூறும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கல்குவாரியினால் பொதுமக்களுக்கு கிராவல் மலிவான விலையில் கிடைக்கும். மேலும், ஊராட்சி மற்றும் பொதுமக்களுக்கு சில நலத்திட்டங்கள் செய்வார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. <u>**திரு. முனிச்சாமி, வடமலைக்குறிச்சி**</u>

திரு. முனிச்சாமி அவர்கள், இந்த கல்குவாரி தொடங்குவதனால் எனது கிராமத்திற்கு எந்தவித பாதிப்பும் இல்லை. கல்குவாரி இயங்குவதனால் அதிலுள்ள கற்கள், கிராவல் மற்றும் மணல் கட்டிடம் கட்டுவதற்கு வசதியாக உள்ளது. அதிக தூரத்திலிருந்து வருவதை விட அருகாமையில் வாங்குவதால் எங்களுக்கு சிரமம் குறைவாக உள்ளது. அதனால் கல்குவாரி தொடங்குவதற்கு முழு சம்மதம் தெரிவித்துக்கொள்கிறோம்.

3. <u>**திரு. நாராயணன், நாட்டார்மங்கலம்.**</u>

திரு. நாராயணன் அவர்கள், கல்குவாரி 300 மீட்டருக்கு அப்பால் செயல்படுகிறது. அதனால் குவாரி இயங்குவதால் எவ்வித பாதிப்பும் இல்லை. குவாரியின் மூலம் கட்டுமானப் பொருட்கள் மலிவாக கிடைக்கிறது என்று தெரிவித்தார்.

4. <u>**திருமதி. சின்னப்பாண்டியம்மாள், நாராயணபுரம்.**</u>

திருமதி. சின்னப்பாண்டியம்மாள் அவர்கள், பாண்டுரங்கன் அவர்கள் குவாரிக்கு ஊரிலிருந்து பாதிப்பு வாரா வண்ணம் தண்ணீர் எடுத்துக்கொள்வதாக கூறியுள்ளார். கல்குவாரி நடத்தக்கூடாது என்று மனு கொடுக்கத்தான் வந்தோம். இருப்பினும், அண்ணன் தண்ணீர் எடுத்துக்கொள்வதாக கேட்டுக்கொண்டதால் சரி என்று ஒப்புதல்

அளித்துள்ளோம். ஆனால், குவாரியினால் இடையூறு வந்தால் தங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தெரிவித்தார்.

5. **திரு. தங்கராஜ்,செங்குன்றாபுரம்.**

திரு. தங்கராஜ் அவர்கள், குவாரி நடத்துவதற்கு எந்தவித ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்தார்.

6. **திரு. பாலமுருகன், செங்குன்றாபுரம்.**

திரு. பாலமுருகன் அவர்கள், பாண்டுரங்கன் அவர்கள் ஊர்மக்களுக்கு நிறைய தொண்டு மற்றும் நன்மைகள் செய்யக்கூடியவர். கல்குவாரி அமைவதனால் எந்தவித ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்தார்.

7. **திரு. பார்த்தசாரதி, மீசலூர்.**

திரு. பார்த்தசாரதி அவர்கள், கல்குவாரி இருப்பதனால் ஊர் மக்களுக்கு கட்டிடத்திற்கு தேவையான கிராவல், எம்.சாண்ட் மலிவு விலையில் கிடைக்கிறது. மேலும், மணல் தூரமாக இருந்து வருவதால் இந்த விலையில் கிடைக்காது என்பதால் கல்குவாரி கண்டிப்பாக அமைய வேண்டும் என்று தெரிவித்தார்.

8. **திரு. ரத்தினவேல், குமாரவேல்புரம்**

திரு. ரத்தினவேல் அவர்கள், கல்குவாரி இருப்பதனால் எனக்கு வீடு கட்டுவதற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கிறது. அதனால் எந்தவொரு இடையூறும் இல்லை என்று தெரிவித்தார்.

9. **திரு. மகேந்திரன், மூளிப்பட்டி**

திரு. மகேந்திரன் அவர்கள், குவாரியினால் வீடு கட்டுவதற்கு தேவையான கற்கல் குறைந்த விலையில் கிடைக்கிறது. ஊர் மருத்துவமனைக்கு தேவையான செட் வசதி செய்து கொடுத்துள்ளார். குவாரி அமைவதனால் சுற்றியுள்ள அனைத்து கிராமத்திற்கும் நன்மையே ஏற்படுகிறது. அதனால் குவாரிக்கு ஆதரவு தெரிவித்துக்கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

10. **திரு. பவுன்ராஜ், செங்குன்றாபுரம்**

திரு. பவுன்ராஜ் அவர்கள், குவாரி அமைவதனால் எந்த ஆட்சேபனையும் இல்லை. வேலை வாய்ப்பு கிடைக்கும் என கருதுகிறோம் என்று தெரிவித்தார்.

11. **திருமதி. ஜெயராணி, மீசலூர்**

திருமதி. ஜெயராணி அவர்கள், பாண்டுரங்கன் அண்ணன் அனைத்து கட்டுமானப் பொருட்களும் கேட்டவுடன் அனுப்பிவைப்பார். அதனால் குவாரி அமைவது

மகிழ்ச்சியளிக்கிறது என்று தெரிவித்தார்.

12. **திரு. காளிதாஸ், செங்குன்றாபுரம்**

திரு. காளிதாஸ் அவர்கள், குவாரி அமைவதனால் எந்த ஆட்சேபனையும் இல்லை. மக்களுக்கு அனைத்து எல்லா நன்மைகளும் செய்வார். எந்தவித பாதிப்பும் இல்லை. எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார்.

13. **திரு. பாண்டியன், நாராயணபுரம்**

திரு. பாண்டியன் அவர்கள், கல்குவாரி அமைவதனால் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்தார்.

14. **திருமதி. ஜோதிலட்சுமி, நாராயணபுரம்**

திருமதி. ஜோதிலட்சுமி அவர்கள், கல்குவாரி இருப்பதால் எங்களுக்கு பாதிப்பும் இல்லை. பாண்டுரங்கன் அண்ணன் எங்களுக்கு நிறைய நன்மைகள் செய்து கொடுக்கிறார். அதனால் குவாரி அமைவதால் எந்த பிரச்சனையும் இல்லை என்று தெரிவித்தார்.

15. **திரு. ஆதவன், பாவாலி**

திரு. ஆதவன் அவர்கள், குவாரி அரசு விதிமுறைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும். குவாரி அமைவதனால் கிராமத்து மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதனால் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

16. **திருமதி. ரங்கம்மாள், நாராயணபுரம்**

திருமதி. ரங்கம்மாள் அவர்கள், குவாரி அமைவதனால் ஆட்சேபனை இல்லை என தெரிவித்தார்.

17. **திருமதி. சுந்தரம்மாள், நாராயணபுரம்**

திருமதி. சுந்தரம்மாள் அவர்கள், குவாரியினால் எந்த பாதிப்பும் இல்லை மற்றும் நல்லதே செய்கிறார் என தெரிவித்தார்.

18. **திருமதி. செல்வி, செங்குன்றாபுரம்**

திருமதி. செல்வி அவர்கள், குவாரி அமைவதனால் எந்த பிரச்சனையும் இல்லை. கட்டுமானத் தொழிலுக்கு ஏதுவாக உள்ளது என தெரிவித்தார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறுயாரும் முன்வராததால்,வருவாய் கோட்டாட்சியர்,சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும்

இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 04 |
| உத்தேசிக்கப்பட்ட குவாரிக்கு ஆதரவாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 03 |
| உத்தேசிக்கப்பட்ட குவாரிக்கு எதிராக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 01 |

அத்துடன் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 11 பக்கங்கள், 128 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).